செ.வெ.எண்: 01/நவம்பர் நாள்: 03.11.2020

## இராமநாதபுரம் மாவட்டம்

# ஜல் ஜீவன் திட்டப் பணிகள் குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் நேரில் ஆய்வு.

இராமநாதபுரம் மாவட்டம், திருப்புல்லாணி ஊராட்சி ஒன்றியம், திருப்புல்லாணி கிராமத்தில் இன்று (03.11.2020) மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் ஜல் ஜீவன் திட்டத்தின் (Jal Jeevan Mission) கீழ் குடியிருப்புகளுக்கு குடிநீர் இணைப்பு குழாய் வழங்குவதற்கு மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளை நேரில் ஆய்வு செய்தார்.

மத்திய ஜல் சக்தி அமைச்சகத்தின் மூலம் தேசிய அளவில் ஊரக பகுதிகளில் ஜல் ஜீவன் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு வீட்டிற்கும் குடிநீர் குழாய் இணைப்புகள் மூலம் பாதுகாப்பான குடிநீர் வழங்குவதை உறுதி செய்திடும் நோக்கில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் கீழ் இராமநாதபுரம் மாவட்டத்தில் முதற்கட்டமாக திருப்புல்லாணி, மண்டபம், கமுதி, பரமக்குடி, போகலூர், நயினார்கோவில், ஆர்.எஸ்.மங்கலம், இராமநாதபுரம் ஆகிய 8 ஊராட்சி ஒன்றியங்களுக்குட்பட்ட 51 ஊராட்சிகள் தேர்வு செய்யப்பட்டு 159 குக்கிராமங்களில் குடியிருப்புகளுக்கு தனித்தனி குடிநீர் இணைப்பு குழாய் வழங்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்காக ரூ.3,371.35 இலட்சம் மதிப்பில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அதன்படி, திருப்புல்லாணி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட திருப்புல்லாணி கிராமத்தில் ஜல் ஜீவன் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் நேரில் ஆய்வு செய்தார். திருப்புல்லாணி ஊராட்சிக்குட்பட்ட 2 குக்கிராமங்களில் மொத்தம் 605 குடியிருப்புகள் உள்ளதாகவும், இக்குடியிருப்புகளுக்கு குடிநீர் இணைப்பு குழாய்கள் வழங்குவதற்கான பணிகள் முன்னேற்றத்தில் உள்ளது என ஊரக வளர்ச்சித்துறை அலுவலர்கள் தெரிவித்தனர். பணிகளை விரைவாகவும், தரமாகவும் நிறைவேற்றிட அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் உத்தரவிட்டார்.

இந்த ஆய்வின்போது, ஊராட்சிகளின் உதவி இயக்குநர் திரு.வீ.கேசவதாசன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு.ரவி, திரு.ரமேஷ்குமார், உதவி செயற்பொறியாளர் திரு.பவுன்ராஜ், உதவி பொறியாளர்கள் திரு.ஜம்பு முத்துராமலிங்கம், திருமதி.ஆனந்தவல்லி, வட்டாட்சியர் திரு.வீரராஜா உட்பட அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**